2018 மார்ச் 19]
பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

நெசவு சார்ந்த தொழிற்கூடம்

***12613—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காமராஜர் நகர் காலனியிலுள்ள தறிப் பட்டறையில் நெசவு சார்ந்த தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அனைத்துத் தரப்பு மக்களின் வரவேற்பினையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான வழிகாட்டுதலோடு, இப்பேரவைக்கு அளித்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காமராஜர் நகர் காலனியில் உள்ள தறிப் பட்டறையில் நெசவு சார்ந்த தொழிற்கூடம் அமைப்பதற்கான முன்மொழிவு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் பெருமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில், கைத்தறிக்கு 200 யூனிட், விசைத்தறிக்கு 750 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்கி, நெசவாளர்களுக்கென பசுமை வீடுகள் திட்டம் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடி மானியத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகையை ரூ.80 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை தலைமை ஏற்று வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நெசவாளர் பெருமக்களின் சார்பில் நன்றி கூறி, வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆசியாவிலேயே சிறப்பான செயல்பாட்டில் முதலாவது எனப் பெயர் பெற்ற சங்கம் ஆகும். இந்தச் சங்கத்திற்கு சொந்தமான அம்மாப்பேட்டை காமராஜர் காலனியில் உள்ள 12 ஆயிரம் மற்றும் 7,500 கூட்டுப் பரப்பு சதுர அடி உள்ள தறிப் பட்டறையில் 40 விசைத்தறிகள், கோவனி ராட்டை, ஊசி ராட்டைமூலம் காடாத் துணி உற்பத்தி நடைபெற்று வந்தது. தற்போது காலியாக உள்ள இவ்விடத்தில் கைத்தறி உற்பத்திப் பொருட்களில் புதுமை முயற்சிகளையும் பல்வகைப்படுத்தலையும் ஊக்குவிக்க, தற்போது இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசால் புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள கைத்தறி உதவித் திட்டத்தின்கீழ் மீண்டும் கைத்தறிகள் அமைக்கப்பட்டு, நெசவாளர்களுக்குப் புதிய ரக வடிவமைப்பு உற்பத்தி பயிற்சி கொடுத்து, கைத்தறித் துணி உற்பத்தியைப் பெருக்குவதுடன், நெசவாளர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2018 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாப்பேட்டை சங்க உறுப்பினர்களிடமிருந்து தொழிற்கூடம் அமைக்க கோரிக்கை பெறப்படின் அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுநாள் வரை எந்தக் கோரிக்கையும் வரப்பெறவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சொன்ன கோரிக்கைக்கு அம்மாப்பேட்டை சங்கத்தின் சார்பாக, கோரிக்கை வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். காலி இடமாக இருக்கின்ற ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் இருக்கின்ற இடத்திலே மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியின்கீழ் எழுப்பப்படுகின்ற கைத்தறி குழுமத் திட்டத்தில் சங்கமானது பங்கெடுத்து, அதற்கான தறிக் கூடங்கள் மற்றும் அதற்குண்டான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து, அந்தத் திட்டத்திலே அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்தினுடைய உறுப்பினர்களைப் பதிவு செய்து, அதிலே அவர்கள் பணியாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இரண்டு திட்டங்களுக்கும் சங்கத்தின் சார்பிலே கோரிக்கை கடிதம் அனுப்பப்படும் நேர்வில், அந்தக் கடிதத்தின்மீது விரைவான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கைத்தறி*

நெசவாளர்களுக்காக, பிரத்யேகமாக ஏற்காடு தொகுதிக்குட்பட்ட அயோத்தியப்பட்டணம் வட்டார கைத்தறி வளர்ச்சிக் குழுமம் ரூ.171.24 இலட்சம் மதிப்பீட்டிலும், எடப்பாடி தொகுதிக்குட்பட்ட நங்கவல்லி வட்டார கைத்தறி வளர்ச்சிக் குழுமம் ரூ.120.38 இலட்சம் மதிப்பீட்டிலும் அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இதுபோன்றதொரு குழுமம் வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். இந்தக் கோரிக்கை சங்க உறுப்பினர்களிடமிருந்து வருகிறபோது, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

48—

சிறு தொழில்கள் வளாகம்

***561—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் சிறு தொழில்கள் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் சிறு தொழில்கள் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழக செயல் தலைவர் அண்ணன் தளபதி